**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயலாணைகள்**
**முன்னிலை : திருமதி.இரா.லலிதா, இ.ஆ.ப.,**

செ.மு.ந.க.எண். 0616/ஊ.வ.2/2021 நாள்: .02.2022.

பொருள்: பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – மயிலாடுதுறை மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலர் திரு.வீ.அருணாச்சலம் என்பவரின் மகன் திரு.அ.குருபிரசாத் இளநிலை உதவியாளர்/ஊர்நல அலுவலர் நிலை-II பதவியில் பணிநியமனம் - பணிவரன்முறை செய்து - ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்-18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ.1)துறை, நாள்:23.01.2020.
2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்:2125/2019/ஊ.வ.5., நாள்:24.10.2019.
3. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்:2125/2019/ஊ.வ.5., நாள்:09.01.2020.
4. அரசு கடித எண்:12325/இ-3/2020-2., நாள்:30.03.2021.
5. அரசாணை (நிலை) எண்-48, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ-3)துறை., நாள்:26.02.2021.
6. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் ந.க.எண்:18355/2021/டி2., நாள்:18.12.2021.
7. அரசு கடித எண்:6895/இ.3/2021-5., நாள்:14.12.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப்பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில், மாப்படுகை ஊராட்சியில் ஊராட்சி செயலராக பணிபுரிந்து 01.12.2018 அன்று பணியிடைக்காலமான திரு.வீ.அருணாச்சலம் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.அ.குருபிரசாத் என்பவருக்கு பார்வை(2)-இல் காணும் செயல்முறைகளின்படி நாகப்பட்டினம் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலவலர் நிலை-II ஆக தற்காலிகமாக பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 01.11.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படியும், மேலும், மறைந்த அரசு ஊழியர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.அ.குருபிரசாத் கருணை அடிப்படையில் பணி நியமனம்கோரி 19.03.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 08.10.2000 என்றும், பணிநியமனம்கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும் அவர் இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என தெரிவித்து பார்வை(3)-இன்படி சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

பார்வை (6)-இல் காணும் சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இளநிலை உதவியாளர் பதவிக்கான நியமன அலுவலராக மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்கள் உள்ள நிலையில், பல மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளதால், நியமன அலவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்களால் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில்

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நியமன அலுவலர்களுக்கு மேல் கூடுதல் அதிகாரம் கொண்டவர்கள் என்பதை கொண்டு பணிவரன்முறை ஆணை வழங்கிடலாமா என்பது குறித்து அரசிடம் தெளிவுரை கோரப்பட்டதில் பார்வை(7)-இல் காணும் அரசுக் கடிதத்தில் கீழ்கண்டவாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

1. இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) என்ற நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும் மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம்.
2. மேலும், இனிவரும் காலங்களில் இளநிலை உதவியாளர் பதவிக்கான நியமன அலுவலரான மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) நிலையிலேயே கருணை அடிப்படை பணிநியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசு கடிதம் மற்றும் அரசாணைகளின்படி கூர்ந்தாய்வு செய்து இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை-II ஆக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.அ.குருபிரசாத் என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை-II பதவியில் 01.11.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

07/2/22

மாவட்ட ஆட்சித்தலைவர்,
மயிலாடுதுறை.

7.2.2022

பெறுநர்:

திரு.அ.குருபிரசாத்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம்(வளர்ச்சிப்பிரிவு),
மயிலாடுதுறை மாவட்டம் - உரிய வழியாக.

நகல்: ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: மாநில கணக்காயர் சென்னை, 18/35
நகல்: கருவூல மற்றும் கணக்குத்துறை ஆணையர் சென்னை-15
நகல்: சார்நிலை கருவூல கணக்கு அலுவலர், மயிலாடுதுறை மாவட்டம்.
நகல்: ஊ.வ.2 மற்றும் ஊ.வ.4 இருப்பு கோப்பிற்கு.